**மதுவரி வெகுமதி நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மதுவரி வெகுமதி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1990 இன் 37 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1912 இன் 8 ஆம் இலக்க மது வரி கட்டளைச் சட்டத்தின் 58 ஏ பிரிவு மற்றும் மதுவரி கட்டளைச் சட்டத்தின் 32(2) (கியு) பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, மதுவரி வெகுமதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வெகுமதி நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை

பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வெகுமதி நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மதுவரி வெகுமதி நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

  வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் விடயப் பரப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இற்கு இணங்காத வகையில் நிறுவனத்தின் நிலையான சொத்துக்களை பெறுமானத் தேய்வுசெய்வதற்குரிய கணக்கீட்டுக் கொள்கை மாற்றப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்காக சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படாமல் இருப்பதற்கு எடுத்த கொள்கை ரதியான தீர்மானங்கள் காரணமாக பெறுமானத்தேய்வு செய்யாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது | காணப்படும் கணக்கீட்டுக் கொளகையை மாற்றினால் அதற்காகஇலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 17(அ) மற்றும் (ஆ) ஏற்பாடுகள் உரித்தாக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதி நிலைமைக் கூற்றில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 47,134,000 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அது கட்டிடத்தின் பெறுமதி மாத்திரமாக இருந்தது. எவ்வாறாயினும் கட்டிடங்கள் அமைந்துள்ள காணி மீளாய்வாண்டின் இறுதி வரை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ப்படாதிருந்ததுடன் காணியின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் ரூபா 47,134,100.00 ஆன கட்டிடங்களுக்கு ஆலோசணையின் பிரகாரம பெறுமானத்தேய்வு கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பிரதேச செயலாளர்களிடமிருந்து கையேற்கப்பட்ட காணி மீள் மதிப்பீட்டின் பின்னர் புத்தகங்களுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. அடுத்த ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்தினை உறுதிப்படுத்தி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 47,134,000 ஆன கட்டிடங்களுக்காக பெறுமானத்தேய்வு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மொத்தம் ரூபா 25,259,100 ஆன ஏனைய ிலையான | 2020 ஆம் ஆண்டிற்காக சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படாமல் இருப்பதற்கு எடுத்த கொள்கை ரீதியான தீர்மானங்கள் காரணமாக பெறுமானத்தேய்வு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | |
|---|---|
| சொத்துக்களுக்காக மீளாய்வாண்டினல் ரூபா 5,223,703 ஆன பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு செய்ப்பட்டிருக்கவில்லை. | செய்யாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தயவுடன் அறிய தருகின்றேன். இது தொடர்பாக இறுதிக் கணக்கு அறிக்கையின் குறிப்புக்களில் 2.6 இல் குறிப்பிடப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது 2020 ஆம் ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரிச்சட்டத்தின் 17 (அ) I மற்றும் II ஆம் பந்திகள் | கிடைக்கும் சிகரட் தண்டப்பணத்திலிருந்து 25 சதவீதமான பகுதியொன்றுடன் புகையிலை வெகுமதி நிதியம் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் நிதியத்தின் ஆரம்பத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாறான நிதியமொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புகையிலை நிதியம் ஒன்று இதுவரை தாபிக்கப்படாமல் இருந்ததுடன் எதிர்காலத்தில் தாபிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் புகையிலை வெகுமதி நிதியம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | மீளாய்வாண்டில் நிதியத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு குறித்த பிரிவு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |
| (இ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 அரச நிதிச் சுற்றறிக்கை<br>(i) 11.1 ஆம் பந்தி, நிதிப்பிரமாணம் 756(6) | நிதி நிலைமைபக் கூற்றில் ரூபா 72,393,100 தொகையான நிலையான சொத்துக்களுக்காக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட | 2021 ஆம் ஆண்டிலிருந்து இது தொடர்பாக அறக்கை யாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) 15.3 ஆம் பந்தி, நிதிப்பிரமாணம் 877(2)(இ) | நிதியத்தின் மீளாய்வாண்டின் செயன்முன்னேற்றம் மீளாய்வு செய்யக்கூடிய வகையில் பாதீடு இலக்கை அதைல், காலாண்டு செயன்முன்னேற்ற அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறித்த அறிக்கையை வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (iii) 15.3 ஆம் பந்தி, நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) | 2020 ஆம் ஆண்டில் மதுவரி வெகுமதி நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் நிதியத்தின் செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து மதுவரி வெகுமதி நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் நிதியத்தின் செயலாற்றல் அறிக்கையொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் தொழிற்பாட்டு விளைவுகள் ரூபா 7,177,263 தொகையான மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் ரூபா 160,411,245 பற்றாக்குறையாக ஆக இருந்தது, அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 167,588,508 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு இணக்கக் கட்டணங்கள் பெறுவனவு ரூபா 86,140,308 அல்லது 36 சதவீதத்தினால் குறைத்து வெகுமதி கொடுப்பனவு ரூபா 247,663,593 அல்லது 63 சதவீதத்தினால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**2.2** மதுவரி வெகுமதி நிதியத்தின் தேறிய சொத்துக்கள் மீதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 42,813,391 அதாவது 11.6 சதவீதத்தினால் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டதுடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு மீதி ரூபா 2,129,466 ஆல் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிலும் முன்னைய 04 ஆண்டுகளுக்கரிய தொழில்நுட்ப குற்றங்கள் தொடர்பாக மதுவரித் திணைக்களத்தின் சட்டத்தை செயற்படுத்தும் பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை சுற்றி வளைப்புக்களின் எண்ணிக்கை வருடாந்தம் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. (அட்டவணை கீழே) | மதுவரி உத்தியோகத்தர் களால் அனுமதிப்பத்திர இடங்கள் அவ்வப்போது மேற்பார்வை செய்யப்பட்டு முறையான கட்டுப்பாட்டுடன் சட்டரீதியான கட்டமைப்பினுள் அச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு அனுமதிப்பத்திரதாரிகளை தொடர்புபடுத்தியதால் தொழில்நுட்ப குற்றங்கள் குறைவதற்கு அவை காரணமாக இருந்தன. ஆதலால் மதுவரி அனுமதிப்பத்திர இடங்களில் இடம்பெறும் மதுவரி அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறுவதில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இதனால் தொழில்நுட்ப சுற்றி வளைப்புக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளன. | அனுமதிப்பத்திர இடங்கள் தொடர்பாக தொடர்ச்சியான முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) இணக்கப்படுத்தலின் பின்னர் தொழில்நுட்ப குற்றங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களால் படிகளை பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப குற்றங்கள் 3749 ஆக கருத்திற் கொள்ளப்பட்ட போதும் 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 3/2011 ஆம் இலக்க தொழில்நுட்ப குற்றங்கள் தொடர்பான மதுவரி சுற்றறிக்கையின் பிரகாரம் நடுவர் தீர்ப்புக் கட்டணங்கள் அறவிடும் போது பிரதான வகுதி நிபந்தனையின் மீறல் சாதாரண தவறாக குறிப்பிடப்பட்டிருந்தது அதன் பிரகாரம் மேற்படி தொழில்நுட்ப குற்றங்கள் கட்டண அறவீடு தொடர்பான அறிக்கைளை பரிசோதித்த போது மொத்த எண்ணிக்கையில் 2284 அதாவது 61 சதவீதம் சாதாரண தவறுகளாக இருந்ததுடன் பிரதான வகைக்குரிய நிபந்தனைகள் மீறல் தொடர்பாக 1465 அளவிலான 39 சதவீதமான குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது. | சுட்டிக் காட்டல் சரியானதாகும். | உயர்மட்ட உத்தியோகத்தர் களால் எழுமாதிரியாக தெரிவு செய்து அனுமதிப்பத்திர இடங்கள் பரீட்சிப்பிற்கு உள்ளாக்குவதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் அசாதாரண தவறுகள் இல்லையென்பதனை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

(அ) அட்டவணை:

| ஆண்டு | சுற்றி வளைப்புக்கள் எண்ணிக்கை | முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக குறைவு | வீழ்ச்சி சதவீதம் |
|---|---|---|---|
| 2016 | 4593 | 339 | - |
| 2017 | 4315 | 278 | 6 |
| 2018 | 3684 | 631 | 14 |
| 2019 | 3623 | 61 | 1.6 |
| 2020 | 2747 | 876 | 24 |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வட மாகாணத்திற்குரிய 5 மதுவரி இடங்கள் மற்றும் மேல் மாகாணத்திற்குரிய மதுவரி நிலையமொன்று 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 141 தொழில்நுட்ப குற்றங்கள் கணக்காய்வு திகதி வரை தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த பதிவேடுகள் பரீட்சிக்கப்பட்டு வருவதுடன் குறித்த பதிலொன்றை எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் தீர்வுசெய்யப்படாத தொழில்நுட்ப குற்றங்களை தீர்வு செய்து பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் தீர்வு செய்வதற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1994 மார்ச் 04 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் அமுலாக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டுவரை 26 ஆண்டுகள் கடந்திருந்த போதும் திணைக்களத்தினால் வெகுமதிக் கொடுப்பனவை செலுத்தும் போது முறைகேடுகள் இடம்பெற்றிருந்தமை, திணைக்கள செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டமை போன்ற விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலை திருத்தம் செய்வதற்காக இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது 1994 மார்ச் 01 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் திருத்தம் செய்யும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளது. | முறைப்படி மதுவரி அறிவித்தல் திருத்தம் செய்யப்படல் |
| (உ) | மதுவரி வெகுமதிக் கொடுப்பனவு | | |
| (i) | 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் வெகுமதிகளை செலுத்துவதற்கான சட்ட ரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கையில் அதற்கு மாறாக, 2020 மார்ச் 16 முதல் நாட்டில் உரவாகிய கொவிட் 19 வைரஸ் பரவியதால், அலுவலக செயல்பாடுகள் செயலற்ற நிலையில் இருந்தமை மே மற்றும் ஜூன் மாதங்களில் பணிக்கு அறிக்கையிடுவது மூன்றில் ஒரு பங்காக மட்டுப்படுத்தப்பட்டமை, நிதியத்திற்கு குறைந்த அளவிலான இணக்கக் கட்டணங்கள் காணப்பட்டமை போன்ற விடயங்கள் காரணாக மதுவரி வெகுமதி நிதியம் சிக்கலான நிலைமையொன்றில் காணப்படும் போது நிர்வாகம் தொடர்பாக தொடர்பான செயற்குழுவினால் செயலாற்றல் நடைமுறையிலிருந்து விலகி வருகை மற்றும் செயலாற்றல் 100 சதவீதம் எனக் குறிப்பிட்டு 2020 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்காக வெகுமதிக் கொடுப்பனவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | திணைக்கள செயற்பாடுகளை தொடர்ச்சியாக பேணுவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் அளவொன்று வருகை தந்திருந்ததுடன் ஏனைய உத்தியோகத்தர்கள் வீடுகளிலிருந்து கடமை புரிந்து வந்தனர். அதன் பிரகாரம் ஆரம்ப சம்பளத்தில் 75 இற்குப் பதிலாக 50% வெகுமதிப் படியாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தற்போது காணப்படும் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதியத்தின் செயற்குழு தீர்மானத்தின் பிரகாரம் 2020 முதல் அரையாண்டிற்காக சம்பவங்களுக்கு அமைய அடிப்படையில் தொடர்புபட்ட உத்தியோகத்தருக்கு உயர்ந்த வகையில் செலுத்த வெண்டிய வெகுமதி | 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதால் குறித்த கொடுப்பனவு | தற்போது காணப்படும் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| படிகள் 2 ½ மாதங்களாக இருந்த போதும் அத எல்லையை மிகைத்து 27 உத்தியோகத்தர்களுக்கு மொத்தம் ரூபா 2,012,879 தொகை வெகுமதி தொகையாக கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடுமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 04 உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் ரூபா 355,000 தொகை மீள அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய பணத்தை அறவிடுவது தொடர்பாக எடுக்கப்பட்ட நடைமுறைகள் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியானது. இந் உத்தியோகத்தர்களுக்கு நிதியத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றியமைக்காக படிகள் செலுத்தப்பட்டதுடன் கொவிட் தொற்று காலப்பகுதியிலும் ரொழில்நுட்ப குற்ற அறிக்கைகளுக்குரிய செயற்பாடுகள் இந்த உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணம் 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் மீள அறவிடுவது தேவையயற்றதென தயவுடன் அறிய தருகின்றேன். | எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்**

-----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் மீது வருடாந்தம் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த தொகைக்குச் சமமான தொகையொன்று, திறைசேரியின் பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந் நிதியத்தின் மீதி ரூபா 56,284,583 ஆக காணப்பட்ட போதும் குறித்த நிதியத்தை வினைத்திறனான செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.மேலும் மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படாமை காரணமாக அந்தளவு பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு மாற்றப்படவில்லை. | அந்த நிதியத்தினைப் பயன்படுத்தி 2021 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்காககணனி மற்றும் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் | பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தினை வினைத்திறனாக பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 நிதியக் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மதுவரி வெகுமதி நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகள், பாரட்டத்தக்க வேலைகள், உள்ளத்துணிவு செயற்பாடுகள், பொழுதுபோக்கு மற்றும் விசேட சுற்றி வளைப்புகள் மற்றும் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் பொறிகள் கொள்வனவு போன்ற செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 39.7 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் ஆண்டில் அச்செயற்பாடுகளுக்காக எந்தவொரு செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டில் அந்நிதிஏற்பாடுகளுக்குரிய கொடுப்பனவுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. | நிதியத்தின் நோக்கங்கள் தொடர்பாக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்த வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 பெப்ரவரி 17 ஆந் திகதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் திருத்தம் செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2021 மார்ச் 23 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | திருத்தம் செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2021 மார்ச் 23 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | காணப்படும் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகளுடன் ஒப்பிடும் போது இரண்டு வருமான விடயங்களில் 18 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையிலும் 07 செலவின விடயங்களில் 14 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை விலகலொன்று அவதானிக்கப் பட்டமையால் பாதீடானது செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக என அவதானிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் பாதீட்டின் பிரகாரம் செலவிடுவதற்காக தேவையான நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | பாதீடானது செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |